# எழுதி வளர்ந்த இயக்கம்


**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

பேராசிரியர் சுப.வீரபாண்டியன்

17

*1960-ஆம் ஆண்டுகளில், **திராவிட நாடு** கோரிக்கையை தி.மு.கழகம் கைவிட்ட பிறகு, அறிஞர் அண்ணா அவர்கள் தந்த ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றுதான், ‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி’ என்பது!*

*மாநில சுயாட்சி குறித்துப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன இரண்டு. ஒன்று, முரசொலி மாறன் அவர்கள் எழுதிய நூல். இன்னொன்று, வழக்கறிஞர்*



கு.ச.ஆனந்தன்

*விளக்கிப் பேசி இருக்கிறார். எந்த ஒரு கூட்டத்திலும், எந்தத் தலைப்பு குறித்தும், எந்த ஒரு குறிப்பும் இல்லாமல் பேசும் ஆற்றலை உடைய அறிஞர் அண்ணா, அந்தக் கூட்டத்தில் மட்டுமே தன் முழு உரையையும் எழுதிப் படித்திருக்கிறார்!*

*அந்த உரை அவருடைய கையெழுத்திலேயே, 40 ஆண்டுகளுக்குப் பிறகு, தலைவர் கலைஞர் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியாகி*

## மாநில சுயாட்சியே உடனடித் தேவை!

***கு.ச.ஆனந்தன் எழுதிய ‘மலர்க மாநில சுயாட்சி’** என்னும் புத்தகம்!*

*கு.ச.ஆனந்தனின் நூல், இரண்டு பகுதிகளாக இப்போது மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்களில், ஏராளமான தகவல்கள், புள்ளிவிவரங்கள் தரப்பட்டுள்ளன. இந்தியா அல்லது தமிழ்நாட்டின் நிலைமைகள் பற்றி மட்டும் அல்லாமல், உலக அளவில் மாநில சுயாட்சி பற்றிய கருத்துரு, நடைமுறை ஆகியன எப்படி உள்ளன என்பதையும் இந்தப் புத்தகம் விரிவாக எடுத்துரைக்கிறது.*

### எழுதிப் படித்த உரை

*மாநில சுயாட்சி பற்றி நாம் அறிந்துகொள்வதற்கு முன்பு, **‘திராவிட நாடு’** கோரிக்கையைத் தி.மு.க. கழகம் ஏன் கைவிட்டது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அது குறித்த அனைத்து விவரங்களையும் 1963 - ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக்குழுவில், அண்ணா அவர்கள் உள்ளது! **‘எண்ணித் துணிக கருமம்’** என்னும் அந்த நூலில், **‘திராவிட நாடு கோரிக்கை’** என்பது என்ன, எந்தக் காலகட்டத்தில் அதை ஏன் கைவிட நேர்ந்தது என்பது குறித்து அண்ணா பேசி இருப்பார். அந்த நூலைத் தெளிவாகப் படித்து முடித்துவிட்டால், அதற்கு அடுத்த நிலையில் மாநில சுயாட்சி என்பது எவ்வளவு தேவையானது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்!*

### ஆங்கிலேயர் காலத்திலேயே மாநில சுயாட்சி!

*மாநில சுயாட்சி நூலின் பக்கங்களையும், புத்தகத்தின் அளவையும் பார்த்து, யாரும் அஞ்சிடத் தேவையில்லை. ஓர் அருமையான உத்தியை நூலில் ஆசிரியர் கையாண்டு இருக்கிறார். ஒவ்வொரு இயல் தொடங்கும் போதும், அந்த இயலின் சுருக்கத்தை ஒன்று அல்லது முக்கால் பக்கத்தில் அவர் தந்துவிடுகிறார். முழு நூலையும் படிக்க இயலாதவர்கள், அந்தச் சுருக்கத்தைப் படித்து, நூலின் உட்பொருளை ஓரளவுக்கு அறிந்துகொள்ள முடியும்!*

*மாநில சுயாட்சி பற்றிய சிந்தனை இந்திய விடுதலைக்கு முன்பு, ஆங்கிலேயர்களின் காலத்திலேயே தொடங்கிவிட்டது என்பதை இந்நூல் விளக்குகிறது.*

*1910-ஆம் ஆண்டில் **பர்னிங் ஹாம்** என்று ஓர் ஆளுநர் சென்னையிலிருந்தார். அப்போது வைஸ்ராயாக இருந்தவருக்கும் இடையில் சில முரண்பாடுகள் தோன்றின. ‘ஆளுநர் பர்னிங் ஹாம் என் ஆணைகள் அனைத்தையும் ஏற்க மறுக்கிறார்’ என்று வைஸ்ராய் இங்கிலாந்துக்கு எழுதினார். அதற்குப் பிறகுதான் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சில தனி உரிமைகளை வழங்கலாம் என்று ஆங்கிலேய அரசு முடிவு செய்தது. அதனை ஏற்று **மாண்டேகு-செம்ஸ்போர்ட் குழு** இரட்டை ஆட்சி முறை என்பதை, 1919-ஆம் ஆண்டு அறிவித்தது. அதன் அடிப்படையில்தான் 1920- ஆம் ஆண்டு இறுதியில் சென்னை மாகாணத்தில் நீதிக் கட்சியின் ஆட்சி அமைந்தது! எனவே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மாநில சுயாட்சி பற்றிய சிந்தனை வந்துவிட்டது என்கிறார் ஆனந்தன்.*

*அதற்குப் பிறகு **அபுல் கலாம் ஆசாத்,** மாநில சுயாட்சி பற்றிய சிந்தனைகளை அழுத்தமாக எடுத்து வைத்திருக்கிறார். அறிஞர் அண்ணா அவர்கள் அதனை நமக்கு முழக்கமாகவும், நோக்கமாகவும் தந்தார்!*




**வருங்காலத்தில் ‘மாநில சுயாட்சி’ என்னும் அதிகாரப் பரவல் ஏற்படவில்லை என்றால், இந்தியா ஒரு சர்வாதிகார நாடாக மாறிவிடக் கூடிய ஆபத்து இருக்கிறது.**

### முன்னோடியான சட்டமன்ற விவாதம்

*அண்ணாவின் வழியில் ஆட்சிக்கு வந்த தலைவர் கலைஞர் அவர்கள், மாநில சுயாட்சி பற்றி விரிவாக ஆராய்ந்து சொல்வதற்கென்றே, 1969-ஆம் ஆண்டு ‘ராஜ மன்னார் குழு’ என்னும் ஒன்றை அமைத்தார். பிறகு மீண்டும் **1974-ஆம் ஆண்டில் சட்ட மன்றத்தில் நான்கு நாட்கள் மாநில சுயாட்சி பற்றி மட்டுமே விவாதம் நடைபெற்றது. இதுவே இந்திய அளவில் மிகப்பெரிய முன்னோடியான நிகழ்வு என்று நூலாசிரியர் குறிக்கின்றார்.***

*இந்தி மொழி எப்படி ஆட்சி மொழியானது, ஒன்றிய அரசின் பட்டியல், மாநில அரசின் பட்டியல், ஒத்திசைவுப் பட்டியல் (UNION LIST, STATE LIST, CONCURRENT LIST) ஆகியவை என்னென்ன அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றன, ஒத்திசைவுப் பட்டியலிலிருந்து அதிகாரங்கள் எவ்வாறு மெதுவாக ஒன்றிய அரசுக்குச் சென்றன என்பன குறித்தெல்லாம் மிக விரிவாக இந்நூல் எடுத்துரைக்கின்றது!*

*வருங்காலத்தில் ‘மாநில சுயாட்சி’ என்னும் அதிகாரப் பரவல் ஏற்பட வில்லை என்றால், இந்தியா ஒரு சர்வாதிகார நாடாக மாறிவிடக் கூடிய ஆபத்து இருக்கிறது. எனவே, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களையும் ஒருங்கிணைத்து மாநில சுயாட்சிக்காகப் போராட வேண்டிய கட்டாயம் இப்போது எழுந்திருக்கிறது! அந்தப் பணியைச் செய்து முடிக்கும் ஆற்றல் தி.மு.கழகத்துக்கும், அதன் தலைமைக்கும் உண்டு என்பது நம்முடைய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும்!*

**-வாசிப்போம்**

## :ப்ளாஷ்பேக்





விஸ்வபாரதி

### அதுதான் உந்துசக்தி!

1992ஆம் ஆண்டு, கழக ஆட்சி கலைக்கப்பட்டு ஓராண்டு நிறைவுற்ற நேரம். தொண்டர்களைச் சந்திக்க ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்துக்கு கொள்கை விளக்கச் சுற்றுப்பயணம் வந்தார் கலைஞர். அப்போது காவேரிப்பட்டினம் நகரத்தில் வளர்ச்சி நிதி திரட்டும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், கலைஞரை வரவேற்று சால்வை அணிவித்து, 10,000 ரூபாய் வளர்ச்சி நிதியை அவரிடம் வழங்கினேன். அப்போதெல்லாம் அதிகம் நிதி வசூல் செய்து கொடுத்தால், தலைவர் கையால் கணையாழி பரிசாகக் கிடைக்கும், அதற்காகவே போட்டிப் போட்டுக் கொண்டு நிதி வசூல் செய்வோம். கணையாழி வாங்கும் அளவிற்கு நான் நிதி வசூல் செய்யவில்லை என்றாலும் முத்தமிழறிஞர் கலைஞர் “வாழ்த்துகள், நல்லா வேலை செய்யுங்கயா” என்று என்னை வாழ்த்தினார். இன்று வரை கழகத்தில் தீவிரமாக இயங்க அந்த வாழ்த்து உந்துசக்தியாக இருக்கிறது.

**-மு.விஸ்வபாரதி, வழக்கறிஞர்,**
**காவேரிப்பட்டினம்**
**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## திராவிட இயக்க இதழ்கள் - புதுவாழ்வு




1948-ஆம் ஆண்டு, தை முதல் நாளான பொங்கல் நாளில் வெளியானது ‘புதுவாழ்வு’ எனும் புதிய இதழ். இந்த இதழின் ஆசிரியர் பேராசிரியர் அவர்கள். அப்போது அவருக்கு வயது 26. துணை ஆசிரியர் **கே.ஜி.இராதாமணாளன்** அவர்கள். இது மாத இதழாக மலர்ந்தது. மேல்நாட்டு அறிஞர்கள் பற்றிய கட்டுரைகளுக்கும் அறிவியல் கட்டுரைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தது இந்த இதழ்.

அந்த இதழில் பேராசிரியர் எழுதிய கட்டுரைகள், பெரும்பாலும் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான தடைகளைக் கண்டிப்பவையாக இருந்தன. **‘இரணியன்’** என்ற இயக்க நாடகத்துக்கும், புலவர் குழந்தையின் **‘இராவண காவியம்’** புத்தகத்துக்கும் விதிக்கப்பட்டிருந்த தடையை அவர் கண்டித்தார்.

“இந்த இதழில் மு.வரதராசனின் கட்டுரைகளும், தமிழ் ஒளியின் கவிதைகளும் வெளியாகியிருக்கின்றன. **‘ஒலிக்கும் சிலம்பு’** என்ற தலைப்பில் இரா.குழூஉத்தலைவன் எழுதிய தொடர் சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயங்களை எளிய, இனிய நடையில் அறிமுகப்படுத்தியது. தமிழாசிரியர்களுக்குக் குறைவாக ஊதியம் நிர்ணயிக்கப்படுவதைக் கண்டித்தும் தாய்மொழி வழிக் கல்வியின் தேவையை உணர்த்தியும் **‘புதுவாழ்வு’** இதழில் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. கல்வித் துறை சார்ந்து அவருக்கு இருந்த தீவிர அக்கறையையும் ஆர்வத்தையும் இவ்விதழில் வெளிவந்த இதுபோன்ற கட்டுரைகளிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது” என்று செல்வ புவியரசன் எனும் ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

மேலும் அவர், “1948- ஆம் ஆண்டு மார்ச் இதழில் வெளியான **‘களஞ்சியப் பணி’** என்ற தலைப்பிலான பேராசிரியர் அவர்களின் கட்டுரை, **‘கலைக்களஞ்சியப் பணியில் இயல்கள்’** ஒவ்வொன்றைக் குறித்தும் தமிழிலேயே உள்ள கருத்துகளை ஒன்றுதிரட்டிக் கொடுப்பதற்கு ஒரு பெருங்குழுவை அமைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியது. பல்துறை அறிஞர்கள் குறித்த அவரது பட்டியல், களஞ்சியப் பணியின் முக்கியத்துவத்தையும் அதில் தமிழறிஞர்கள் பங்கேற்பதில் அவருக்கு இருந்த அக்கறையையும் எடுத்துக்காட்டுகிறது” என்கிறார்.


சுமார் ஓராண்டு காலம் வெளியான இவ்விதழ், பத்து இதழ்களுடன் நின்றுவிட்டது. அந்த இதழின் பெயரிலேயே பதிப்பகம் ஒன்றையும் அவர் நடத்தி வந்தார். **தி.மு.க.வின் மீதான விமர்சனங்களை மறுக்கும் ‘தொண்டா? துவேஷமா?’, வகுப்புரிமை வரலாற்றைச் சொல்லும் ‘கிளர்ச்சி எதற்கு?’ ஆகியவை ‘புதுவாழ்வு’ வெளியீடுகளாக வந்தன.**

### கருவூலம்

### திருப்புமுனைத் தேர்தல்

**1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சியை கழகம் கைப்பற்றியது. வெற்றிபெற்ற கழக உறுப்பினர்கள், மாநகர மன்ற மாளிகை முன் நிற்கும் சர்.பிட்டி தியாகராயர் திருஉருவச் சிலை முன்பாக அணிவகுத்து மரியாதை செய்தனர். அப்போது பொதுச் செயலாளராக இருந்த, நாவலர் நெடுஞ்செழியன், தேர்தல் பொறுப்பாளராக இருந்த, சட்டமன்ற உறுப்பினர் கலைஞர் ஆகியோர், சென்னை மாநகராட்சியின் தலைவராக சர்.பிட்டி தியாகராயர் செயல்படுத்திய பல திட்டங்களை நினைவுகூர்ந்தனர். சென்னை மாநகர மன்றம் ஏழைகளின் தேவைகளை நிறைவேற்றும் மன்றமாக இருக்கும் என அறிவித்தனர். பல அரசியல் திருப்புமுனைகளுக்கு சென்னை மாநகராட்சித் தேர்தல் வெற்றி காரணமாக அமைந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 119




**எழுத்து : கோவி.லெனின்**
**ஓவியம் : கி.சொக்கலிங்கம்**

**-வாழ்வோம்**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131